# இலக்கியங்களில் முருக வழிபாடு

# Worship of Lord Muruga in Literatures

*முனைவர் மா. முத்து விஜயலட்சுமி*
இணைப்பேராசிரியர்
தமிழ் முதுகலை மற்றும் உயராய்வு மையம்
அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கலைக் கல்லூரி, பழனி, இந்தியா

**Dr. M. Muthu Vijayakshmi**
*Associate Professor*
*PG and Research Department of Tamil*
*Arulmigu Palaniandavar Arts College for Women*
*Palani, India*

## ஆய்வுச் சுருக்கம்

*முருகன் இந்திய துணைக் கண்டத்தில் பண்டைய காலம் தொட்டு வணங்கப்படும் ஒரு முக்கிய தெய்வமாகக் கருதப்படுகிறார். இவரை அதிகம் வழிபடுபவர்கள் தமிழர்களே ஆவர். இதனால் இவர் "தமிழ்க்கடவுள்" என்று அழைக்கப்படுகிறார். சங்க காலத்தில் குறிஞ்சி நிலப் பகுதியின் தெய்வமாகப் போற்றப்பட்டார். கி.மு. மூன்றாம் நூற்றாண்டிற்கும் கி.பி ஐந்தாம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட கால கட்டமான சங்க இலக்கிய படைப்புகள் முருகனை நீலமயிலின் மீது அமர்ந்திருக்கும் சிவப்பு கடவுள் என்றும், இளமையாகவும் பிரகாசமாகவும் இருப்பவன் தமிழர்களின் விருப்பமான கடவுள் என்றும் போற்றுகின்றது.*

## Abstract

*Lord Murugan is considered an important deity worshiped in the Indian subcontinent since ancient times. He is primarily worshipped by the Tamil people, earning him the title "Tamil God". During the Sangam era, he was venerated as the deity of the Kurinji (mountainous) region. Sangam literary works, dating between the 3rd century BCE and the 5th century CE, praise Murugan as "the red-hued god seated on a blue peacock," described as youthful, radiant, and the beloved deity of the Tamil people.*

**Citation**

Muthuvijayalakshmi, M. "Worship of Lord Muruga in Literature" *Journal of Tamil Culture and Literature*, vol. 4, no. 2, 2024, pp. 51-57.

**DOI**: *https://doi.org/10.5281/zenodo.20069350*

**முருகன் என்பதன் விளக்கம்**

*முருகா என்று ஒருமுறை சொல்லும் பொழுதே முருகனோடு சேர்ந்து மும்மூர்த்திகளும் அருள் வழங்க வருவர் "மு" என்றால் முகுந்தன் என்று அழைக்கப்படும் திருமாலையும், "ரு" என்றால் ருத்ரன் என அழைப்படும் சிவனையும், "க" என்றால் கமலத்தில் (தாமரை) அமர்ந்திருக்கும் பிரம்மாவையும் குறிக்கின்றது. மும்மூர்த்திகளுக்கும் உள்ள முதல் எழுத்துக்களை இணைத்தால் "முருக" என்று வரக்கூடியதாக அமைகின்றது. இத்தகு சிறப்புடைய முருகனை வணங்கினால் மும்மூர்த்திகளின் அருளும் சேர்ந்தே அனைவருக்கும் கிடைக்கின்றது. முருகன் என்பதற்கு அழகு என்பது பொருளாகும்.*

*முருகன் அழித்த ஆறு பகைவர்கள் ஆணவம், கன்மம், குரோதம், லோபம் (சுயநலம்), மதம் (கர்வம்), மாற்சர்யம் (பொறாமை) ஆகியோர் ஆவர். ஒவ்வொரு மனிதனுக்குள் இருக்கும் இந்த ஆறு குணங்களையும் அழித்து அவர்களை நல்வழிப்படுத்தி அருள்புரியும் தொழிலைச் செய்கின்றான்.*

*சங்க இலக்கியமான பரிபாடல் முருகனைச் செவ்வேல் என்றும் நெடுவேல் என்றும் குறிப்பிடுகிறது.*

**தோற்றமும் வலிமையும்**

***ஒஅற இமைக்கும் சேண்விளங்கு அவிர்ஒளி,***
***உறுநர்த் தாங்கிய மதன்உடை நோன்தாள்***
***செறுநர்த் தேய்த்த செல்உறழ் தடக்கை***
***மறுஇல் கற்பின் வாள்நுதல் கணவன்"***

***(திருமுருகு: 3-6 அடிகள்)***

*செம்மையான ஒளியுடைய முருகன் தம்மைச் சார்ந்தவரைக் காப்பாற்றுகின்ற அழகையும் வலிமையையும் உடைய பாதங்களை உடையவன். தம்மைப் பகைத்தவர்களை அழிக்கின்ற இடிபோன்ற பெரிய கைகளை உடையவன். குற்றமில்லாத கற்பினையுடைய ஒளிபொருந்திய நெற்றியையுடைய தெய்வானையின் கணவன் ஆகத் திகழ்கின்றார்.*

***"தலைபெயல் தலைஇய தண்நறுங் கானத்து***
***இருள்படப் பொதுளிய பராரை மராஅத்து***
***உருள்பூந் தண்தார் புரளும் மார்பினன்"***

***(திருமுருகு: 9-11 அடிகள்)***

*கார்காலத்தில் முதலில் பெய்த மழையால் தழைத்து வளர்ந்த பெரிய அடியையுடைய செங்கடம்ப மரத்தில் இருந்து மலர்ந்து காணப்படுகின்ற தேர்ச்சக்கரம் போன்ற வட்ட வடிவமுடைய மலர்களால் கோர்த்த மாலையை மார்பில் அணிந்திருக்கக் கூடியவன்.*

***கடுஞ்சூர் மாமுதல் தடிந்து அறுத்தவேல்***
***அரும்போ ராளா!***

***(பரிபாடல்: 9: 70-71 அடிகள்)***

*கொடிய சூரபதுமனாகிய மாமரத்தினை வெட்டி அறுத்த வேலைக்கொண்ட போர் செய்யும் முருகா என்று குன்றம்பூதனார் தம் பாடலில் குறிப்பிட்டுள்ளார்.*

***"பாய்இரும் பனிக்கடல் பார்துகள் படப்புக்கு***
***சேய்உயர் பிணிமுகம் ஊர்ந்து, அமர்உழக்கி***
***தீஅழல் துவைப்பத் திரிய விட்டெறிந்து"***

***(பரிபாடல்: 5:1-3)***

*பரந்து குளிர்ச்சி பொருந்திய கடலுள் புகுந்து பாறைகள் தூளாகுமாறு வேரைச் சுற்றி எரிந்து தன் பிணிமுகம் என்ற யானை ஊர்தியில் சென்று பிறரைத் துன்புறுத்திய சூரனாகிய மாமரத்தை அடியோடு வெட்டினாய் என கடுவன் இளவெயினார் பாடியுள்ளார்.*

**வழங்கப்படும் பெயர்கள்**

*மலைகளில் குடி கொண்டுள்ள குமரனுக்குச் சிலம்பன் என்றொருப் பெயரும், விசாகன் என்ற மற்றொருப் பெயரும் வழங்கப்படுகின்றது. விசாகன் என்றால் மயிலில் சஞ்சரிப்பவன் எனப்பொருளாகும். கங்கையால் தாங்கப்பட்டதால் காங்கேயன் என்றும், சரவணப்பொய்கையில் உதித்ததால் சரவணன் என்றும் சக்தியினால் ஆறுஉருவமும் ஒர் உருவமாக ஆக்கப்பட்டதால் கந்தன் எனவும் பெயர் பெற்றான். மேலும் குகன், வேலன், சுப்பிரமணியன், மால்மருகன், கந்தன், கடம்பன், திருக்குமரன் வடிவேலன், மயில்வாகனன், தணிகைவேல், தணிகாசலம், சேவற்கொடியோன், பழனி, குமரகுருபரர் எனப் பல பெயர்களிலும் அழைக்கப்படுகின்றான்.*

**தலங்கள்**

*முருகப் பெருமானுக்காகக் கட்டப்பட்ட முதல் திருக்கோவில் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள ஒற்றைக் கண்ணூர்த் திருக்கோயிலாகும். முதலாம் ஆதித்த சோழன் இதனைக் கட்டியுள்ளான். இந்தக் கோவிலில் முருகனுக்கு யானை வாகனமாக உள்ளது. ஒரு திருக்கரத்தில் ஜபமாலையும், மறுகரத்தில் சின்முத்திரையும் விளங்க அருள் தருகின்றான், அறுபடை வீடுகளாக, திருப்பரங்குன்றம், திருச்செந்தூர்(திருச்சீரலைவாய்), திருவாவினன்குடி (பழனி), திருவேரகம் (சுவாமி மலை), குன்றுதோறாடல் (திருத்தணி), பழமுதிர்சோலை ஆகியன படைவீடுகளாகக் காணப்படுகின்றது. மேலும் தமிழகத்தில் முருகனுக்குக் குடைவரைக் கோயில்களும் அமைந்துள்ளன. அவை கழுகுமலை, திருக்கழுக்குன்றம், குன்றக்குடி, குடுமியான் மலை, சித்தன்னவாசல், வள்ளிக்கோவில், மாமல்லபுரம் போன்ற இடங்களாகும்.*

**சிறப்புகள்**

*முருகப்பெருமானின் வலப்புறம் உள்ள ஆறு கரங்களில் அபயகரம், கோழிக்கொடி, வச்சிரம், அங்குசம், அம்பு, வேல், என்ற ஆறு ஆயுதங்களும், இடப்புறம் உள்ள ஆறு கரங்களில் வரமளிக்கும் கை, தாமரை, மணி, மழு, தண்டாயுதம், போன்றவையும் இருக்கும். முருகனின் கோழிக் கொடிக்கும் குக்குடம் என்றோர் பெயருண்டு இந்தக் கோழியே வைகறைப் பொழுதில் ஒங்கார மந்திரத்தை ஒளிவடிவில் உணர்த்துவதாகும். முருகப்பெருமான் போர் புரிந்து திருச்செந்தூரில் சூரபத்மனையும், திருப்பரங்குன்றத்தில் தாரகாசுரனையும், போரூரில் சிங்கமுகாசூரனையும் அழித்தார்.*

***“அறுமுகத்து ஆறுஇரு தோளால் வென்றி”***

***(பரிபாடல் - 14: 21)***

*ஆறுமுகங்களையும் பன்னிருதோள்களையும் உடையவன் என கேசவனார் பாடிய செவ்வேள் பாடல் உணர்த்துகின்றது.*

*முத்தமிழால் வைதாரையும் வாழ வைப்பான் முருகன் என்று அருட்கவி அருணகிரியார் பாடியுள்ளார். கருப்பை வாசம் செய்யாதவர். பிரம்மசரியம் கிருகஸ்தவதும் சந்நியாசம் ஆகிய கோலங்களில் முருகனை மட்டுமே காணமுடியும். இது பிற கடவுள்களுக்கு இல்லாத ஒரு தனிச் சிறப்பாகும்.*

**காவடி எடுத்தல்**

*காவடி என்பது தமிழ்ப் பண்பாட்டுக் கூறுகளுள் ஒன்றாகக் கருதப்படுகிறது. உலகில் வாழும் தமிழ் மக்கள் குலந்தோறும் வீற்றிருக்கும் முருகனின் கோவிலை நோக்கி வழிபடச் செல்வர். அப்போது முருகப் பெருமானின் வழிபாட்டிற்காக பால் அபிசேக நீர் முதலான வழிபாட்டுப் பொருள்களைக் காவடிகளில்கொண்டு செல்வர். அப்படிச் செல்லும் போது களைப்பு நீங்க, முருகப் பெருமானின் புகழை சிந்து வகைப் பாடலாகப் பாடிக்கொண்டு சென்று இறைவனின் அருள்பெறுவர். காவடிகளில் பலவகைக் காணப்படுகிறது. காவடிச்சிந்து பாடலுக்குரிய மெட்டுகள் அண்ணாமலைரெட்டியார் என்பவரால் அமைக்கப்பட்டதால் அவரை காவடிச் சிந்தின் தந்தை எனப் போற்றுகின்றனர்.*

***"கருணை முருகனைப் போற்றி தங்கக்***
***காவடி தோளின் மேல் ஏற்றி கொழும்***
***கனம் எறிய மெழுகால் வருபவர் எவரும் இகமேகதி***
***காண்பார் இன்பம் பூண்பார் (காவடி சிந்து )***

*கோவில்வளம் என்ற தலைப்பில் அமைந்த பாடலில் முருகனுக்கு செலுத்தும் காவடியின் சிறப்பு பற்றி அண்ணாமலை ரெட்டியார் பாடியுள்ளார்.*

**வேல்**

*முருகனுக்குக் கையில் உள்ள வேல் வெற்றியைத் தரக்கூடியதாகும் ஆகையால் முருகனுக்கு வேலாயுதம் என்றப் பெயரும் உண்டு.*

***தேரணி யிட்டுப் புரமெரித்***
***தான்மகன் செங்கையில் வேல்***
***கூரணி யிட்(டு) அணு வாகிக்***
***கிரௌஞ்சங் குலைந்தரக்கர்***

***(கந்தரலங்காரம்- 3:1-4)***

*முப்புரங்களையும் தன் சிரிப்பினால் அழித்த சிவனாரின் திருக்குமரராகிய முருகன் தன் சிவந்த கையிலுள்ள கூரிய வேலை எறிய, அதனால் அவ்வேலானது விரைந்து சென்று கிரௌஞ்ச மலையைத் தாக்கி, அணு அணுவாகச் சிதறி அழித்தது.*

*மயில் ஏறும் பெருமகனின் திருவடிகளுக்கு அணிகலனாக இருப்பது தேவர்களின் தலைகளும் கடப்பமாலையும் ஆகும். திருக்கரத்தில் உள்ள வேலுக்கு கடலும், சூரபன்மனும் மேருமலையை அழித்த நிலையும் அணிகலனாக அமைகின்றது.*

***"மொண்டுண்டு அயர்கினும் வேல்மற***
***வேன்முது கூளித்திரள்"***

***(கந்தரலங்காரம் - 37:3-4)***

*கள் குடித்து வெறியால் அறிவு மயங்கினாலும் அடியார்களைக் காக்கும் நின் வேலை கண் இமைக்கும் காலம் கூட மறவேன் எனக் குறிப்பிடுகின்றார்.*

***"இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க"***

***(திருவாசகம் - சிவபுராணம்)***

*கண் இமைக்கின்ற அந்த சிறுபொழுது நேரம் கூட என் மனதில் இருந்து நீங்காதவன் சி வபெருமான் என மாணிக்கவாசகரும் பாடியுள்ளார்.*

**மயில்**

> ***"கசையிடு வாகி விசைகொண்ட***
> ***வாகனப் பீலியின் கொத்(து)***
> ***அசைபடு கால்பட்டு அசைந்தது"***

***(கந்தரலங்காரம் - 11:3-5)***

*குதிரையின் வேகத்தைப் போன்று மிகுந்த வேகத்தைக் கொண்ட மயில் வாகனத்தில் உள்ள தோகைகளின் தொகுதி அசைவதனால் உண்டாகின்ற காற்றுப்பட்டு மகாமேருமலை அசைந்ததாகவும்.*

*பெண்களைப் புகழ்ந்து மயங்கித் திரிந்து காலத்தை வீணாக்குபவன் செந்திலோன் திருக்கையில் உள்ள வேலையும் வெற்றியைத் தரும் பசுந்தோகைகளைக் கொண்ட மயில் வாகனத்தின் பெருமையையும் வெட்சி மலர்களையும் தண்டையினை அணிந்த செந்தாமரை போன்ற திருவடியையும் வணங்காமல் எவ்விதம் முக்தி பெறுவாய் எனப் பாடியுள்ளார்.*

**சேவல்**

*முருகன் சேவற்கொடியினை தனக்குரியதாகக் கொண்டவன்.*

> ***"தடைபட்ட சேவல் சிறகடிக்***
> ***கொள்ளச் சலதிகிழிந்(து)***
> ***உடைபட்டது அண்ட கடாகம்***

***(கந்தரலங்காரம்-12:3-5)***

*எதிராளிகளின் தடையாகிய கொடுஞ்செயலை அழித்தலில் வன்மை பொருந்திய சேவலானது சிறகடிக்க அவ்வேகத்தால் கடல் கிழிபட்டு அண்ட முகடுகள் இடிந்து உதிர்ந்தன.*

**அருணகிரியாருக்கு உபதேசித்தல்**

*முருகப் பெருமான் கந்தரலங்காரத்தில் வரக் கூடிய பல பாடல்களில் அருணகிரியாருக்கு உபதேசம் செய்வதாகக் காணப்படுகிறது.*

> ***"கொணா மொழித் தெய்வள்ளி***
> ***கோனன்(று) எனக்குப தேசித்த(து)***
> ***ஒன்றுண்டு கூறவற்றோ***

***(கந்தரலங்கரம் -9: 2-4)***

*வள்ளி நாயகரின் கணவரான சண்முகச் செல்வன் அந்தநாளில் அடியேனுக்குக் குருவாக வந்து உபதேசித்த பொருள் ஒன்றுண்டு என்றும்*

> ***பெம்மான் முருகன் பிறவான் இறவான்***
> ***சும்மாயிரு சொல்லற என்றலுமே***
> ***அம்மா பொருள் ஒன்றும் அறிந்திலனே***

***(கந்தரனுபூதி- 12: 2-4)***

*பிறப்பு, இறப்பு அற்றவரும் ஆனவர். சொல் லொழித்து சும்மா இரு என்று உபதேசிக்கவும் அதன் பொருளை அறியாது நின்றேன் என மௌன உபதேசம் பெற்ற நிலை உணர்த்தப்படுகிறது.*

**வழிபாட்டு முறையும் பயனும்**

*முருகப் பொருமானுக்கு உகந்த மலர்களாகிய முல்லை;, சாமந்தி. ரோஜா, காந்தள், வெட்சி முதலியவற்றால் வழிபாடு செய்வர். குமரனை வணங்கி விரதம் இருந்து அவன் அருளைப்*

*பெறுவர். சஷ்டி, விசாகம், கார்த்திகை, திங்கள், செவ்வாய் ஆகிய அனைத்து நாட்களும் ஏற்றதாகக் கருதப்படுகின்றது.*

***“கொன்றை கொடி இணர் ஊழ்ப்ப கொடுமலர்***
***மன்றல் மலர, மலர் காந்தள் வாய் நாற***

***(பரிபாடல் - 8:25)***

*கொத்து கொத்தாக மலரும் கொன்றை மலர்கள் விரிந்த காந்தள் பூக்கள் இருக்கும் இடங்களில் எல்லாம் மணம் கமழ்ந்தத என நல்லந்துவனார் பாடியுள்ளார்.*

***தடுங்கோள் மனத்தை விடுங்கோள்***
***வெகுளியைத் தானம் என்றும்***
***இடுங்கோள் இருந்த படியிருங்***
***கோள்எழு பாடும் உய்ய***

***(கந்தரலங்காரம - 16: 1-4)***

*உலக மக்களிடம் மனத்தை அலையவிடாமல் கோபத்தை விடுத்து எப்போதும் ஏழை, எளியவர்களுக்குத் தானம் வழங்குங்கள். இந்நிலையில் நீங்காதிருப்பின், முருகப்பெருமானின் அருள் தானே வந்து சேரும்.*

*குமரனை உண்மையான அன்பினால் உள்ளம் உருகப்பாடி தம்மிடம் யாசிப்பவருக்குப் பொருள் இருக்கும் பொழுதே, கொடுக்க முடிந்தைக் கொடுத்து உதவாதவர்கள் பாவ வழியில் தாம் தேடிய பொருளை இழந்து துன்பப்பட்டு வாழ்நாளை வீணாக்குவர்.*

***“முருகன் குமரன் குகன் என்று மொழிந்து***
***உருகும் செயல் தந்து உணர்வு என்(று) அருள்வாய்***
***பொரு புங்கவரும் புவியும் பரவும்***
***குரு புங்கவு எண்குண பஞ்சரனே***

***(கந்தரனுபூதி-15)***

*அசுரருடன் போர் செய்யும் தேவரும், மண்ணுலகத்தோரும் போற்றிப் புகழும் குகன் என்ற உன் திருநாமங்களை மனமுருகிச் சொல்லும் மெய் உணர்வினை என்று அருள்வாய்.*

*முருகனை வழிபடும் அனைவருக்கும் வேலை, திருமணம், குழந்தைப்பேறு, கடன், பணக்கஷ்டம், வீடு தொடர்பான பிரச்சனை, நோய்கள், காரியவெற்றி என எதை வேண்டினாலும், விரதம் இருந்து வழிபட்டாலும் சகல நலன்களையும் தரக்கூடியவர். கனவில் உருகிய மெழுகு போன்று கடவுளை நோக்கி பத்தியோடு பாடி ஆடி வரும் அன்பர்கள் அனைவரும் முருகனின் அருளைப் பெற்று இன்பம் அடைவர்.*

*கடலைக் கடப்பதற்கு இன்றியமையாத கருவியாக இருப்பது தோணியாகும். பிறவிப் பெருங்கடலில் விழுந்து கரை காணது கலங்கி நிற்கின்ற ஆன்மகோடிகளுக்கு முருகவேளுடைய திருவடியே சிறந்த தோணி (புணை)யாகும்.*

***உருவாய் அருவாய் உளதாய் இலதாய்***
***மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்***
***கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்***
***குருவாய் வருவாய் அருள்வாய் குகனே***

**துணைநூற் பட்டியல்**


*1. ச. வே. சுப்பிரமணியன், சங்க இலக்கியம் பத்துப்பாட்டு மூலமும் தெளிவுரையும், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, இ, பதிப்பு டிசம்- 2010.*

2. ச. வே. சுப்ரமணியன் சங்க இலக்கியம் எட்டுத்தொகை மூலமும் தெளிவுரையும், தொகுதி-2 மணிவாசகர் பதிப்பகம், சென்னை, இ, பதிப்பு டிசம்-2010.
3. எம். என. ராஜன்., காவடிச்சிந்து சகுந்தலை நிலையம், சென்னை, மு. பதிப்பு அக்-2005.
4. பி. ரா. நடராசன்., கந்தரலங்காரம் கந்தரனுபூதி மூலமும் உரையும் சகுந்தலை நிலையம், சென்னை, மு. பதிப்பு, அக்-2011.
5. சாமி. சிதம்பரனார்., நாலடியார்.. மல்லிகா வெளியீடு, சென்னை, மு. பதிப்பு -2006
6. ச. வே. சுப்ரமணியன் சங்க இலக்கியம் எட்டுத்தொகை மூலமும் தெளிவுரையும், தொகுதி-3 மணிவாசகர் பதிப்பகம், சென்னை இ. பதிப்பு -டிசம்-2010.
7. அ. மணிக்கம்., பன்னிரு திருமுறைகள் தொகுதி-11, வர்த்தமானன் பதிப்பகம், சென்னை.
8. மு. பெரி. மு. இராமசாமி., திருக்குறள் ஸ்ரீ இந்து பப்ளிகேஷன்ஸ், சென்னை, பனிரெண்டாம் செம்பதிப்பு ஜன-2001.


**References**


1. S. V. Subramanian, “Sanga Literature through the Ten Poems and Explanations”, Manivasagar Publishing House, Chennai, E, Edition Dec-2010.
2. S. V. Subramanian “Sanga Literature, Eighth Edition and Explanation, Volume-2 Manivasagar Publishing House, Chennai, E, Edition Dec-2010.
3. M. En. Rajan., Kavadichindu Shakuntala Institute, Chennai, M. Edition Oct-2005.
4. P. R. Natarasan., Gandharalangaram Gandharanubhuti Moolamum Textum Shakuntala Nilayam, Chennai, First Edition, Oct-2011.
5. Sami. Chidambaranar., Naladiyar.. Mallika Publication, Chennai, M. Edition -2006.
6. S. V. Subramanian “Sanga Literature, Eighth Edition and Explanation, Volume-3 Manivasagar Publishing House, Chennai E. Edition - Dec-2010.
7. A. Manikam., “Panniru Thirumuraikal” Volume-11, Varthamanan Publishing House, Chennai.
8. M. Peri. M. Ramasamy., Thirukural Sri Hindu Publications, Chennai, twelfth edition Jan-2001.